பக்கங்கள்:-17

காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 06 | புதன்கிழமை | 23.10.2024 | அதிர்வு 82 |
|---|---|---|---|---|---|

## மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் ஆராய்வு

(விரிவான செய்தி 4 ஆம் பக்கத்தில்)





# மாகாண சபை பொறிமுறையை முறைப்படுத்த பரிந்துரையொன்றைத் துரிதமாகத் தயாரிக்குக!

## ஆளுநர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

மாகாண சபை பொறிமுறையை நெறிப்படுத்துவதற்கான பரிந்துரையொன்றைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்தார்.

மாகாண சபைகளின் கீழ் உள்ள சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதோடு அதற்குச் சாதகமான தீர்வுகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

05

## வன்னித் தேர்தல் மாவட்டத்தில்

# உதயராசாவின் வேட்புமனுவை ஏற்கும்படி நீதிமன்றம் உத்தரவு



வன்னித் தேர்தல் மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் பட்டியலை ஏற்றுக்கொள்ளும்படி உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருக்கின்றது.

வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக மேற்படி கூட்டணியின் முதன்மை வேட்பாளரும் சிறீரெலோ கட்சியின் செயலாளர் நாயகமுமான ப.உதயராசா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்குஎடுத்தநீதியரசர்கள்பத்மன்சூரசேன, ஷிரான் குணதிலக, அச்சல வெங்கப்புலி ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்த உத்தரவை தேர்தல் ஆணையத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கியிருக்கின்றது.

இது தொடர்பான நீதிமன்ற விளக்கம் இன்று புதன்கிழமை

05




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவை விசாரணை செய்து, கைது செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என இலங்கைப் பொலிஸார் கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கைப் பொலிஸாரின் வழமையான கூற்று இத்தகையதுதான்.

ஸ்ரீரங்கா விடயத்தில் தாங்கள் உரிய நடவடிக்கை எடுத்திருக்கின்றனர் என்றும் – பிரதான சந்தேக நபரான ஸ்ரீரங்காவைத் தற்போது வீடு உட்பட எங்கு தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால் அடுத்த நாள் அதேநேரம், அதே ஸ்ரீரங்கா வவுனியாவில் பகிரங்க ஊடக மாநாடு ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார்.

தாங்கள் தேடும் ஸ்ரீரங்காவைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அவரைத் தேடி

05

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை ஏற்காவிடின் அதன் தரவுகள் பொய் என்பதை அரசு நிரூபிக்க வேண்டும்

## முன்னாள் அமைச்சர் ராஜித வலியுறுத்து



"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் அதில் தெரிவிக்கப் பட்டிருக்கும் தரவுகள் பிழை என்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். ஓய்வுபெற்ற நீதியரசர்களைக்கொண்ட குழுவி னால் தயாரிக்கப்படும் விசாரணை அறிக்கையை அரசியல் நோக்கத்துக்காகத் தயாரிக்கப்பட்டது என எவ்வாறு தெரிவிக்க முடியும் எனக் கேட்கின்றோம்."

– இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தி, அதன் சூத்திரதாரிகளைச் சட்டத்துக்கு முன்னால் நிறுத்துவதாக ஜனாதிபதி தலைமையிலான அரசு தெரிவித் திருந்தது. அநுரகுமார மீது நம்பிக்கை வைத்து கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் மறைமுகமாக அநுரகுமாரவுக்கு ஆதரவளிக்குமாறு தெரிவித்து வந்தார்.

ஆனால், உயிர்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தற் போது வெளிவந்திருக்கும் ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசர் அல்விஸ் தலைமையிலான குழுவின் விசாரணை அறிக் கையில் 17 பேருக்கு எதிராக வழக்குத் தொடுக்குமாறு பரிந் துரை செய்யப்பட்டிருக்கின்றது.

ஆனால், இந்த 17 பேரில் ஒருவர்தான் குற்றப் புலனாய் வுப் பிரிவின் முன்னாள் சிரேஷ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன. இவர்தான் தாக்குதல் தொடர்பில் இந்தி யாவின் புலனாய்வுப் பிரிவு, தெளிவான தகவல் அனுப்பி இருந்தபோதும், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தவறி இருக்கின்றார்.

ஆனால், அநுரகுமார திஸாநாயக்க பதவிக்கு வந்ததுடன் பொது மக்கள் பாதுகப்பு அமைச்சின் செயலாளராக ரவி செனவிரத்னவை நியமித்து, உயிர்த்த ஞாயிறு தினத் தாக் குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பையும் அவருக்கே வழங்கியுள்ளார். இவ்வாறான நபரிடமிருந்து உண்மையான விசாரணையை எதிர்பார்க்க முடியுமா எனக் கேட்கின்றோம்.

அதேநேரம் அநுரகுமார திஸாநாயக்க பதவிக்கு வந்த பின்னர் வழங்கிய நியமனங்கள் தொடர்பில் விமர்சனங்கள் இருக்கின்றன. அந்த நபர்களின் பின்னணி தொடர்பில் தேடிப் பார்க்காமலேயே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின் றன. அனுபவம் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

அத்துடன் உதய கம்மன்பிலவினால் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அது அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித் திருக்கின்றார்.

ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசர்களைக் கொண்ட குழுவொன்றை அமைத்து விசாரணை மேற்கொண்டு தயாரிக்கப்படும் அறிக்கை அரசியல் நோக்கம் கொண்டது எனத் தெரிவிக்குமானால் இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட விசாரணை அறிக்கைகளையும் அவ்வாறு தெரிவித்தால், தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்போது நீதி கிடைக் கப் போகின்றது? இந்த அரசும் புதிய விசாரணை ஒன்றை ஆரம்பித்து அதனை 5 வருடங்களுக்கு இழுத்துக்கொண்டு செல்லும் நிலைதான் ஏற்படும்.

அதேநேரம் வெளியிடப்பட்டிருக்கும் விசாரணை அறிக் கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால், அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தரவுகள் பிழை என்பதை அரசு நிரூபிக்க வேண்டும்.

எனவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி காலத்தைக் கடத்தா மல் விசாரணை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களை அடிப்படையாக்கொண்டு, இந்தத் தாக்குதலின் பின்னணியைக் கண்டு பிடிக்க வேண்டும்." – என்றார்.

# லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் யாழ். தவிர்ந்த எந்த நீதிமன்றிலும் முற்படத் தயார்

## உயர்நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்திய கோட்டாபய



லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தவிர்ந்த எந்தவொரு நீதிமன்றிலும் சாட்சியமளிக்கத் தான் தயாராக இருக்கிறார் என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது இந்த நிலைப்பாட்டை சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா மூலமாக நேற்று செவ்வாய்க்கிழமை உயர்நீதிமன் றத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி யான கோட்டாபய ராஜபக்ஷ.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்ட னர். இவர்களை அரச புலனாய்வுப் பிரிவினரும் இராணுவத் தினருமே கடத்திச் சென்றிருந்தனர் என்று குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் லலித், குகனின் உறவினர்கள் ஆள் கொணர்வு மனு ஒன்றைக் கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தி ருந்தனர். இதனை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது.

இதையடுத்து 2012ஆம் ஆண்டு செப்டெம்பர் 19ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஆரம்பமானது. எனினும், இந்த வழக்கில் பிரதி வாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த அப்போதைய பாதுகாப்பு செயலரான கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியமளிப்பதைத் தவிர்த்து வந்திருந்தார்.

இதனிடையே, தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு வழக்கில் கோட்டாபய ராஜபக்ஷவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத் துக்கு சாட்சியமளிக்க அழைக்க முடியாது என்ற உத்தரவை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவைச் சவாலுக்கு உட்படுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போதே, கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை அவரின் சட்டத்தரணி உயர்நீதிமன்றத்துக்கு தெரிவித்திருந்தார்.

## அல்விஸ் குழுவின் அறிக்கையை ஏற்கமாட்டோம்

# ஜனாதிபதி அநுரவுக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டுவர முன்னர் தேர்தலில் வென்று காட்டுங்கள்

## உதய கம்மன்பிலவுக்கு விஜித ஹேரத் சவால்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டு வருவதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலில் வென்று காட்டுங்கள் என்று முன்னாள் எம்.பி. உதய கம்மன்பிலவுக்குச் சவால் விடுத்துள்ளார் அமைச்சர் விஜித ஹேரத்.

அத்துடன், அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட அல்விஸ் குழுவின் அறிக்கையைத் தாம் ஏற்கமாட்டோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் குழப்புவதற்காகவே ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர போன்றவர்களை உதய கம்மன்பில குழுவினர் குறிவைத்துள்ளனர் என்றும் அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

# போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்தவை பாதுகாக்க வேண்டியது அநுர அரசின் பொறுப்பு

## இப்படிக் கூறுகின்றார் நாமல்



"நாட்டைப் பிளவுபடுத்துவதற்குப் புலிப் பயங்கரவாதிகள், டயஸ்போராக்களாக முயற்சித்து வரும் சூழ்நிலையில், போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்ஷவைப் பாதுகாக்க வேண்டியது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் பொறுப்பாகும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"புலிப் பயங்கரவாதிகள், டயஸ்போராக்களாக இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கும், தமது இலக்கை அடைவதற்கும் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர். அதேபோல் உலகளவில் அடிப்படைவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிராதம் தலைதூக்கியுள்ளன.

இவற்றுக்கு எதிராகப் போராடி, போரை முடித்த தலைவருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் கடப்பாடாகும்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டியதும் அரசின் பொறுப்பாகும்.

அதேவேளை, எமது அரசியல் முகாம்தான் இந்த நாட்டை அபிவிருத்தி செய்தது. எனவே, நாட்டை வீழ்த்துவதற்குரிய குரோத அரசியலில் ஈடுபடுவதற்கு நாம் தயாரில்லை.

உலகில் எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். ராஜபக்ஷக்கள் சட்டவிரோதமாக எதையேனும் சேமித்து வைத்திருந்தால் அவற்றைக் கொண்டு வாருங்கள். அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும்." – என்றார்.



ஜனாதிபதியின் செயலாளர் - இந்தியத் தூதுவர் சந்திப்பு

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் ஆராய்வு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக குமாநாயக்கவை நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

வடக்குக் கடலில் தற்போது நிலவும் கடற்றொழில் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி, ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நீண்டகாலத் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

மேலும், இரு நாடுகளும் எதிர்கொள்ளும் பொதுவான சவால்களை வெற்றிகொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தியத் திட்டங்கள் தொடர்பிலும் மீளாய்வு நடத்தப்பட்டது.

இந்தியக் கடன்உதவிகள் மூலம் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்து மேலும் ஆராயப்பட்டதுடன், திட்டப்பணிகளை உரிய நேரத்தில் நிறைவுசெய்வதற்காக அந்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டது.

# கொழும்பு துறைமுக கிழக்கு முனைய திட்டத்தை 'விசேட செயற்றிட்டமாக' பெயரிடுவதற்கு அனுமதி



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய செயற்றிட்டத்தை "விசேட செயற்றிட்டமாக" பெயரிட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவை அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையால் கொழும்பு தெற்கு துறைமுக செயற்றிட்டத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

துறைமுக அதிகார சபைக்கு முழுமையான உரித்துடன் கூடிய கொள்கலன் முனையமாக அதனை இயக்குவதற்கு ஏற்கனவே அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த சிவில் வேலைகளுக்கான ஒப்பந்தம் தற்போது வழங்கப்பட்டுள்ளதுடன், கட்டுமானப் பணிகளும் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகிறோம் என நீதிமன்றத்தில் வியாக்கியானம் செய்யும் இலங்கைப் பொலிஸார் உண்மையில் ஸ்ரீரங்கா விடயத்தில் நீதி நேர்மையாக நடந்து கொள்வார்கள் என்று நம்புவது சந்தேகத்துக்குரியதே.

\+ + +

"வடக்கு – கிழக்கு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குவது தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் கடந்த வாரம் கலந்துரையாடியிருக்கின்றோம். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இது சம்பந்தமாக முன்னெடுப்புகளை மேற்கொள்வது தொடர்பாக சில இணக்கப்பாடுகளும் எட்டுப்பட்டுள்ளன."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். வடமராட்சியில் நடைபெற்ற இளைஞர்களுடனான கேள்வி – பதில் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இப்படிக் கூறியிருக்கின்றார்.

இந்தத் தகவல் இப்போதும் ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசுடன் தமிழர் தரப்பில் ஊடாடும் பிரதிநிதியாக சுமந்திரனே இருக்கின்றார் என்ற நிலையை உறுதிப்படுத்தி நிற்கிறது.

அண்மையில் சிறுபான்மையினரின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய விடயத்தை கோடிகாட்டிய புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க "தமிழர் தரப்பில் முக்கிய அரசியல்வாதி ஒருவருடன் அண்மையில் உரையாடினேன். தேர்தலுக்குப் பின்னர் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமாக அரசுடன் ஊடாடிச் செயற்பட அவர் தமது மக்கள் சார்பில் இணக்கம் தெரிவித்திருக்கிறார்" என்று கூறினார் எனச் செய்திகள் வெளியாகி இருந்தன.

அப்படி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பூடகமாகக் குறிப்பிட்டவர் சுமந்திரனாகவே இருக்கும் என்று பலரும் ஊகித்திருந்தனர்.

அந்த ஊகம் சரியானது என்பது அண்மையில் பிரதமர் ஹரிணி அமரசூரியாவுடன் தாம் நடத்திய பேச்சு பற்றிய சுமந்திரனின் கருத்து வெளிப்பாடு உறுதிப்படுத்தி நிற்கின்றது.

---

## உதயராசாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படும் எனத் தெரிகின்றது.

மனிதாரர்கள் சார்பில் முன்னாள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி முன்னிலையாகி வாதிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாகாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய நிலைமாறு காலத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை இலகுபடுத்துவதற்கு மாகாண சபைகளினால் வழங்கக் கூடிய உச்ச சேவையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெற்ற மாகாண ஆளுநர்களுடனான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கையை இலகுவாக்கும் வகையில் மாகாண சபைகளினால் சாத்தியமான அனைத்து பொருளாதார மற்றும் சமூக தலையீடுகளையும் மேற்கொள்ளுமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

புதிய அரசியல் கலாசாரமொன்றை ஆரம்பிப்பதற்காகக் கிடைத்துள்ள மக்கள் ஆணையை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, மக்களின் எதிர்பார்ப்பை பாதிக்காத வகையில் செயற்படுமாறும் வலியுறுத்தினார்.

அரசாங்க சொத்துக்களைப் பயன்படுத்துவதில் முன்னைய மோசமான முன்னுதாரணங்களைஒதுக்கிதரமானஅரசசேவைக்குத் தம்மை அர்ப்பணிக்குமாறும் ஆளுநர்களிடம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதன்போது வடக்கு, கிழக்கு காணிகள் தொடர்பாகவும், மாகாண சபை நிதிப் பயன்பாடு தொடர்பிலும் ஆழமாக ஆராயப்பட்டது.

கந்தளாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சப்ரகமுவ மாகாண ஆளுநர்சம்பாஜானகிராஜரத்ன,கிழக்குமாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர, தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிஸ்சந்திர, மத்திய மாகாண ஆளுநர் சரத் பண்டார சமரசிங்க அபயகோன் மற்றும் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த குமார விமலசிரி ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.







# அரச நிறுவனங்களுக்கு புதிய அதிகாரிகள் நியமனம்



அரச நிறுவனங்கள் சிலவற்றுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், திறைசேரியின் உயர்மட்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு புதிய அதிகாரிகளை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மத்திய கலாசார நிதியத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக கலாநிதி ரி.எம்.ஜே. நிலான் குரே நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அதன் தவிசாளராக கலாநிதி பந்துர திலீப விதாரண நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக ரியர் அட்மிரல் வை.ஆர். சேரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

# இலங்கைக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்க தயார்

## சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவிப்பு



இலங்கைக்குசிறந்தஎதிர்காலத்தைஉருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜியேவா தெரிவித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த கூட்டத்தில் பங்குபற்றிய இலங்கை பிரதிநிதிகளை சந்தித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

வொஷிங்டன் டிசியில் நடைபெறுகின்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்டவர்கள் பங்கேற்கின்றனர்.

எதிர்கால நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என கிரிஸ்டலினா ஜோர்ஜியேவா தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# முன்னாள் ஜனாதிபதி ரணில் மீண்டும் விசேட அறிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று மீண்டும் ஒரு விசேட அறிவிப்பை வெளியிடவுள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பாக தமது பதவிக் காலத்தில் தம்மால் நியமிக்கப்பட்ட 2 விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் தொடர்பாக அவரது விசேட உரை அமையும் என அவருக்கு நெருக்கமான தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகளில் ஒன்றை முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில அண்மையில் வெளியிட்டிருந்த நிலையில், ரணிலின் விசேட அறிக்கையை வெளியிடத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நடமாடும் தேங்காய் விற்பனைத் திட்டம்

தேங்காய் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் சுற்றுச்சூழல், வனவிலங்கு மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சகம் "நடமாடும் தேங்காய் விற்பனைத் திட்டத்தை" இன்று ஆரம்பிக்கவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாகக் கொழும்பு, ஸ்ரீஜெயவர்தனபுர கோட்டை மற்றும் கடுவெல ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய கொழும்பு, வெலிக்கடை, கிருலப்பனை மற்றும் நிதி அமைச்சினைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடமாடும் வாகனங்கள் ஊடாக தேங்காய் கொள்வனவு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது நுகர்வோர் ரூ. 100 -120 வரையில் தேங்காய்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனச் சுற்றுச்சூழல், வனவிலங்கு மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

# 8 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் மீட்பு

விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட போதைப் பொருள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட போதைப் பொருள்களில் 7 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள், 1.1 கிலோ குஷ் போதைப் பொருள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போதைப்பொருள் கையிருப்பின் பெறுமதி 8 கோடி ரூபாவிற்கும் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள களஞ்சியசாலையில் இருந்து இந்த போதைப்பொருள் இருப்பு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முட்டை பதுக்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

முட்டைகளைப் பதுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புக்களைத் துரிதப்படுத்த நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி சந்தைக்கு முட்டை விநியோகம் தடைப்பட்டாலோ? அல்லது மொத்த முட்டை விநியோக நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டாலோ? சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தகவல் பிரிவின் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

அண்மைய நாட்களில் 28 ரூபா முதல் 32 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது 40 ரூபாவாக அதிகரித்துள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கேள்விக்குள்ளாகும் ஆணைக் குழுக்கள்

'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' என்பார்கள். பல சமயங்களில் கலகங்கள், கலவரங்கள், களேபரங்கள் நிகழ்ந்தால் தான் நியாயங்கள் பிறக்கின்றன.

இப்போது ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பான சர்ச்சையினால் இலங்கையின் விசேட கட்டமைப்பான ஜனாதிபதி ஆணை குழுக்களின் சீத்துவம் பற்றிய விடயம் அம்பலமாகிக் கொண்டு இருக்கின்றது. அதுவும் அதிகாரத் தரப்பினால் அந்த அமைப்பின் தனித்துவம் அம்பலமாகிக் கொண்டு இருக்கின்றது.

1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட - நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை முன்னிறுத்துகின்ற - இப்போதைய அரசமைப்பின் கீழ்தான் ஜனாதிபதி ஆணை குழுக்கள், விசேட ஜனாதிபதி ஆணை குழுக்கள் போன்ற முக்கிய அம்சங்கள் நடைமுறைக்கு வந்தன.

இந்த அரசமைப்பு கொண்டு வந்து ஒரு சில ஆண்டுகளுக்குள்ளேயே முதலாவது அரசியல் பழிவாங்கலாக அப்போதைய எதிரணிப் பிரமுகரான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையை ஏழு ஆண்டுகளுக்குப் பறிக்கும் நடவடிக்கையை விசேட ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணை மூலம் முன்னெடுத்தார் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன.

அன்று முதல் இந்த ஜனாதிபதி ஆணை குழுக்கள், விசேட ஜனாதிபதி ஆணை குழுக்கள் போன்றவை ஓய்வு பெற்ற நீதியரசர்கள் மற்றும் பிரமுகர்களை முன்னிறுத்தி நியமிக்கப்பட்டு வந்தாலும், அவை நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியில் இருப்பவரின் அரசியல் உள்நோக்கங்களுக்கான சித்து விளையாட்டாகவே கவனிக்கப்பட்டு - கணிக்கப்பட்டு - வந்தன.

அதிலும் விசேட ஜனாதிபதி ஆணைக் குழு ஒரு நீதிமன்ற அதிகாரத்தை கொண்ட கட்டமைப்புப் போல செயற்படுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

ஆனால், அந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் அரசியல் நோக்கத்தை கொண்ட குளறுபடித் தனங்கள்தான் என்பது இப்போது ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் விடயங்கள் பற்றிய ஆணைக்குழுக்களின் விசாரணைகள், அறிக்கைகள், அவை பற்றிய கருத்து பரிமாறல்கள், அவற்றின் அடிப்படையில் அந்த ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் தொடர்பாக ஆளும்தரப்பின் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் போன்றவை மூலம் உறுதியாகி வருகின்றது.

விசேட ஜனாதிபதி ஆணை குழுக்களும், ஜனாதிபதி ஆணை குழுக்களும் நீதிமன்றங்கள் போல தனித்துவமான நீதி - நியாயமான கட்டமைப்புகள் போல காட்டப்பட்டாலும், அவை உண்மையில் எத்தகையவை என்பதை இப்போதைய ஈஸ்டர் ஞயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணை குழுக்களின் அறிக்கைகள் அம்பலப்படுத்தி நிற்கின்றன.

அந்த ஆணைக்குழுக்களும், அவற்றின் அறிக்கைகளும், முன்னைய ஜனாதிபதியினால் அவரின் அரசியல் நோக்கங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டவை என்று தற்போதைய ஆட்சியாளர்கள் கூறுவதன் மூலம், ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் தனித்துவம் - சிறப்பு - நியாயமான போக்கு ஆகியவை கேள்விக்கும் சந்தேகத்துக்கும் உட்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது கவனிக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

முன்னைய ஜனாதிபதிகள் நியமித்த ஆணைக் குழுக்கள் நீதி, நியாயமானவை என்றோ, பக்கச் சார்பற்றவை என்றோ நம்ப மறுத்து, அதன் காரணமாக புதிய விசாரணை ஆணைக் குழுவை அமைக்க புதிய ஜனாதிபதி அநுரகுமாரதிஸநாயக்கமுடிவெடுத்து இருக்கின்றார் என்ற அறிவிப்பு நேற்று வெளியானது. அமைச்சரவை பேச்சாளரான விஜித ஹேரத் நேற்று இவ்விடயத்தை அம்பலப்படுத்தினார். இது விடயதில் அவர் தெரிவித்த கருத்துக்கள், ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் தனித்துவமானவை, நீதிமன்றங்கள் போல பக்கச் சார்பின்றி நடக்கக் கூடியவை, நியாயமானவை என்ற படத்தை அடியோடு அழித்துவிட்டன என்பதும் கவனிக்கத் தக்கது.

ஒவ்வொரு ஜனாதிபதியும் அவ்வப்போது தாம் தாம் நியமிக்கும் ஜனாதிபதி ஆணை குழுக்களே நீதி, நியாயமானவை, நேர்மைத் தன்மை கொண்டவை என்று கருத முற்பட்டால், முன்னைய ஜனாதிபதிகளின் காலங்களில் வெளியான ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் - பரிந்துரைகள் - நடவடிக்கைகளை குப்பைக் கூடைக்குள் தூக்கி வீச வேண்டியது தான்.

# பெங்களூரில் கனமழையால் சரிந்து விழுந்த அடுக்குமாடி கட்டடம்; 3 பேர் சடலமாக மீட்பு



பெங்களூரில் புதிதாக கட்டப்பட்டுக் கொண்டிருந்த அடுக்குமாடி கட்டடம் ஒன்று கனமழை காரணமாக இடிந்து விழுந்தது. இதில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

பெங்களூரில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. நகரின் பல்வேறு முக்கிய பகுதிகளில் தண்ணீர் தேங்கி வெள்ளம் போல் காட்சியளிக்கிறது. வாகன சாரதிகள் கடும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக யெலஹங்கா பகுதியில் 157 மி.மீ மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த சூழலில் ஹென்னூர் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுக் கொண்டிருந்த அடுக்குமாடி கட்டடம் ஒன்று கனமழை காரணமாக இடிந்து விழுந்தது. இதில் அக்கட்டடத்தில் பணிபுரிந்த 20 தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். உடனடியாக தீயணைப்புத் துறை மற்றும் காவல்துறைக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில், அங்கு விரைந்து வந்த அதிகாரிகள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இடிபாடுகளில் இதுவரை 3 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இடிபாடுகளில் சிக்கிய தொழிலாளர்களின் நிலை என்னவென்று தெரியாததால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். இரண்டு வாகனங்களில் வந்த தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

20 பேர் அந்த கட்டிடத்தில் பணிபுரிந்து வந்ததாக கூறப்படுகிறது. அஸ்திவாரம் பலவீனமாக இருந்ததே இந்த விபத்துக்கு காரணம் என்று விசாரணையில் தெரியவந்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஏழு அடுக்குகளைக் கொண்ட அந்த கட்டிடம் சரியும் சிசிடிவி காணொலி காட்சி சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. அந்த பகுதியில் 4 மாடிக் கட்டிடங்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டவிரோதமாக அந்த கட்டடம் கட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.



# கூட்டணிகள் கைவிட்டால் தி.மு.க கீழே விழுந்துவிடும்

## இ.பி.எஸ். விமர்சனம்

கூட்டணிகட்சிகள்கைவிட்டால்,திமுககீழேவிழுந்துவிடும்.என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி விமர்சித்துள்ளார்.

சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் எடப்பாடி சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் நேற்று நடந்தது. இதில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

“கட்டடத்தின் வலிமைக்கு அஸ்திவாரம் வலுவாக உள்ளதைப் போல அ.தி.மு.கவில் கிளைக் கழகம் வலுவாக உள்ளது. எடப்பாடியில் எதிரிகள் புறமுதுகைக் காட்டி ஓடிவிட்டனர். எதிர்வரும் சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக மாபெரும் வெற்றி பெற்று சரித்திர சாதனை படைக்கும். நாடாளுமன்றத் தேர்தல் வேறு சட்டப்பேரவை தேர்தல் வேறு. அடுத்து வரும் ஃபைனல் மேட்சில் அதிமுகதான் வெற்றி பெறும். மக்களுக்கு உண்மை செய்திகள் ஒருநாள் தெரிய வரும் போது தி.மு.க. காணாமல் போகும்.

தி.மு.க கட்சியில் பலமில்லை, கூட்டணி பலத்தையே தி.மு.க . நம்பி உள்ளது. கூட்டணி கட்சிகள் கைவிட்டால் தி.மு.க. கீழே விழுந்துவிடும். எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆட்சி காலத்திலும் வெற்றி, தோல்விகளை மாறி மாறி சந்தித்த கட்சி அ.தி.மு.க. எந்தக் கட்சிக்கும் வெற்றி, தோல்வி நிரந்தரம் இல்லை. தமிழகத்தில் 30 ஆண்டுகள் ஆட்சி செய்த ஒரே கட்சி அ.தி.மு.க. தான். இதனால் தான் தமிழகம் இன்றைக்கு நாட்டின் முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

அ.தி.மு.கவில் மட்டும் தான் சாதாரண தொண்டன் கூட உயர்ந்த பதவிக்கு வர முடியும். எந்த ஆட்சியும் நிந்தரம் இல்லை. தற்போது மக்கள் விரோத ஆட்சி நடக்கிறது. உதயநிதி, ஒரு செங்கல்லை தூக்கிக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. சிறப்பான ஆட்சிக்கு எடுத்துக்காட்டு அ.தி.மு.க. ஆட்சிதான். உதயநிதியை துணை முதல்வராக்கியது மட்டும் தான் தி.மு.க. அரசின் சாதனை. தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்தவுடன் மறந்து அந்தர்பல்டி அடிக்கும் ஒரே கட்சி தி.மு.க.

தி.மு.கவில் வாரிசு அரசியல்தான் நடக்கிறது. கருணாநிதிக்கு அடுத்து ஸ்டாலின், தற்போது உதயநிதியை முன்நிறுத்துகிறார்கள். இது ஒருபோதும் நடக்காது. திமுக மூலம் மன்னராட்சியை மீண்டும் தொடங்க நினைக்கிறார்கள். கருணாநிதி குடும்பத்தில் பிறந்ததால் தான் உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி கிடைத்தது. 50 ஆண்டு காலம் கட்சிக்காக உழைத்து படிப்படியாக உயர்ந்ததால் தான் எனக்கு பொதுச்செயலாளர் பதவி கிடைத்தது. கட்சியில் மூத்த நிர்வாகிகள் பலர் இருந்தும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். துணை முதல்வர் பதவிக்கு தி.மு.கவில் உதயநிதியை தவிர வேறு ஆளா இல்லை.

ஸ்டாலினுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரின் குடும்பத்தைச் சேர்ந்த வேறு ஒருவருக்கு பதவி கொடுக்க வேண்டும் என்பதற்காக வேக வேகமாக உதயநிதிக்கு அடுத்தடுத்து பதவிகளை வழங்கி வருகிறார்கள் என மக்கள் பேசுகிறார்கள். உதயநிதிக்கு எந்த அனுபவமும் இல்லை. மிசாவில் சிறைக்குச் சென்ற வேறு யாருக்கும் துணை முதல்வர் பதவி தரவில்லையே. மூத்த நிர்வாகிகளை தூக்கி எறிந்துவிட்டு, ஜெட் வேகத்தில் உதயநிதிக்கு பதவியை வழங்கியுள்ளனர். உதயநிதிக்கு பதவியை மக்கள் கொடுக்கவில்லை. குடும்ப உறுப்பினரான முதல்வர் ஸ்டாலின் தான் வழங்கி உள்ளார்.” - என்றார்.




# ரஷ்யா - உக்ரைன் மோதலுக்கு அமைதித் தீர்வு: புடினிடம் இந்திய பிரதமர் மோடி வலியுறுத்தல்

ரஷ்யா - உக்ரைன் இடையே நிலவும் மோதல்கள் அனைத்தும் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று புடின் உடனான பேச்சுவார்த்தையின்போது பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான பிரிக்ஸ் கூட்டமைப்பின் 16 ஆவது உச்சி மாநாடு ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்வதற்காக கசான் சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, உச்சி மாநாட்டுக்கு முன்னதாக ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தையில் இரு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஜனாதிபதி புடின்,

“கடந்த ஜூலையில் நாம் சந்தித்து பல்வேறு விஷயங்கள் குறித்து நன்றாக விவாதித்தது எனக்கு நினைவிருக்கிறது. நாம் பலமுறை தொலைபேசியில் பேசினோம். எனது அழைப்பை ஏற்று கசானுக்கு வருகை தந்ததற்காக நான் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் இன்று நாம் பங்கேற்க இருக்கிறோம். அதன் பிறகு, நாம் இரவு விருந்தின்போதும் விவாதிக்க இருக்கிறோம். மேலும், பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் மற்ற தலைவர்களுடன் இணைந்து பல்வேறு முக்கிய முடிவுகளை நாம் எடுக்க இருக்கிறோம்.

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை நாங்கள் மிகவும் முக்கியமானதாக கருதுகிறோம். குறிப்பாக, இந்தியாவும் ரஷ்யாவும் பிரிக்ஸ் அமைப்பின் முக்கிய உறுப்பு நாடுகள் என்பதை மனதில் கொண்டுள்ளோம். இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான கூட்டாண்மை மிகவும் சிறப்பு வாய்ந்தது. நமது இந்த உறவு தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

அரசுகளுக்கிடையேயான ஆணையத்தின் அடுத்தக் கூட்டம் டில்லியில் டிசம்பர் 12 ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ளது. நமது திட்டங்கள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றன. கசானில் இந்திய துணை தூதரகத்தை திறக்க நீங்கள் முடிவு செய்துள்ளீர்கள். இதனை நாங்கள் வரவேற்கிறோம். நமது ஒத்துழைப்பு இந்தியாவின் கொள்கைகளால் பயனடையும். ரஷ்யாவில் உங்களையும் பிரதமர் மோடி உங்கள் பிரதிநிதிகளையும் பார்த்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.” - என்றார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி,

“உங்கள் நட்பு, அன்பான வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்காக இதுபோன்ற அழகான நகரத்துக்கு வரக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. கசான் நகரத்துடன் இந்தியா ஆழமான வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளது. கசானில் தொடங்க உள்ள புதிய இந்திய தூதரகம் உறவை மேலும் வலுப்படுத்தும்.

கடந்த 3 மாதங்களில் ரஷ்யாவுக்கு நான் மேற்கொண்ட இரண்டாவது பயணம் இது. நமது நெருக்கத்தையும், ஒருங்கிணைப்பையும், ஆழமான நட்பையும் இது பிரதிபலிக்கிறது. கடந்த ஜூலை மாதம் மாஸ்கோவில் நடந்த நமது வருடாந்திர உச்சி மாநாடு அனைத்து துறைகளிலும் நமது ஒத்துழைப்பை வலுப்படுத்தியுள்ளது. 15 ஆண்டுகளில், பிரிக்ஸ் அதன் சிறப்பு அடையாளத்தை உருவாக்கியுள்ளது. இப்போது உலகின் பல நாடுகள் இதில் சேர விரும்புகின்றன.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே நிலவும் மோதல்கள் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை முன்கூட்டியே நிறுவுவதை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். முயற்சிகள் அனைத்தும் மனித நேயத்துக்கு முன்னுரிமை அளிக்கின்றன. வரும் காலங்களில் அனைத்து விதமான ஒத்துழைப்பையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையே நிலவும் மோதல் விவகாரத்தில் நான் தொடர்ந்து உங்களுடன் தொடர்பில் இருந்தேன். நான் முன்பே கூறியது போல், பிரச்சனைகள் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நாங்கள் முழுமையாக ஆதரிப்போம்.” - என்றார்.









# 500 மில்லியன் டொலர் பணம் பதுங்கு குழியில் கண்டுபிடிப்பு

## இஸ்ரேலிய இராணுவம் அறிவிப்பு!

பெய்ரூட் பதுங்கு குழியிலிருந்த 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான பணம், தங்கம் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன என இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

காசாவில் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேலிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இருதரப்புக்கும் இடையே தாக்குதல்கள் தொடர்ந்துவரும் நிலையில், பெய்ரூட்டில் மிகப்பெரிய பதுங்கு குழியை இஸ்ரேல் இராணுவம் கண்டுபிடித்துள்ளது.

அந்த பதுங்கு குழி ஹசன் நஸ்ரல்லாவின் இரகசிய பதுங்கு குழி என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பதுங்கு குழியிலிருந்து பெருமளவிலான தங்கம், பணம் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதன் மதிப்பு 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.



# உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் 26 ஆம் திகதி ஆரம்பம்




எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த முறை பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தத்தமது செலவின அறிக்கைகளைக் கைவசம் வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அண்மையில் வெளியான வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அனைத்து வேட்பாளர்களும், சுயேச்சை குழுக்களும், அரசியல் கட்சிகளும் செயற்பட வேண்டும்.

இல்லையெனில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க எச்சரித்துள்ளார்.

# வெள்ள நிவாரணமாக சீனாவிடமிருந்து இலங்கைக்கு 30 மில்லியன் ரூபா உதவி



அண்மையில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சீன அரசாங்கம் 30 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்த இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹொங் இந்த உதவித் தொகையை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியிடம் கையளித்தார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர கால நிவாரணம் வழங்குவதற்கும் வெள்ளத்தடுப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டிய நீண்டகால உத்திகள் குறித்தும் இந்த சந்திப்பில் ஆராயப்பட்டது.

மேலும், எதிர்கால வெள்ள நிலைமைகளைத் தடுப்பதற்கும், அவ்வாறான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துவதற்கும் பின்பற்றக்கூடிய நிலையான தீர்வுகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அண்மையில் பெய்த கடும்மழையால், பல மாவட்டங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்ததோடு உட்கட்டமைப்பு மற்றும் விவசாயத்திற்கு பெரும் சேதம் ஏற்பட்டதாக அறிக்கைகள் தெரிவித்தன.



# சீரற்ற வானிலையால் 940 பேர் பாதிப்பு

நாட்டில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக 3 மாவட்டங்களில் 369 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கேகாலை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களினால் 2 பேர் காயமடைந்த நிலையில், 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, தென், வடமேல் மற்றும் வட மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வட மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றர் வரையில் மழை பெய்யக்கூடுமென அந்த திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகளவில் பலத்த மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்குப் பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# பொதுத் தேர்தல் தொடர்பில் 439 முறைப்பாடுகள் பதிவு




பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இதுவரையில் 439 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 427 முறைப்பாடுகளும், 2 வன்முறைச் சம்பவங்களும், ஏனைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 10 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 162 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 277 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

# நாடாளுமன்றப் பெரும்பான்மை கிடைத்தால் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவோம்

## சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வோம் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



"நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு மக்கள் வழங்கினால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இணைந்து செயற்பட்டு, சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தில் உள்ள மக்கள் விரோத விதிகளை மாற்றி, மக்கள் பக்கம் இருந்து மக்களுக்குச் சுமையை ஏற்படுத்ததாது, சர்வதேச நாணய நிதியத்துடன் மக்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் புதிய இணக்கப் பாட்டை எட்டுவோம்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு தேர்தல் தொகுதி அமைப்பாளர் முஜிபுர் ரஹ்மான் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பில் கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கலந்துகொண்டனர். இதில் சஜித் பிரேமதாஸ உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட முறையற்ற வரிச்சூத்திரம் விரைவில் மாறும் என மக்கள் எதிர்பார்த்தனர்.

அநுரகுமார திஸாநாயக்கவின் அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி இந்த வரிச்சூத்திரத்தை மாற்றும் என மக்கள் எதிர்பார்த்தனர்.

அவர்கள் கூறியதை, கூறுவதை வெறும் பேச்சில் மாத்திரமல்லாது நடைமுறையிலும் மாற்ற வேண்டும். இலட்சக்கணக்கான மக்கள் தங்களின் நேரடி மற்றும் மறைமுக வரிகள் குறைக்கப்படும் என எதிர்பார்த்திருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்தபோது, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தின.

அந்தக் கலந்துரையாடல்களில், முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசால் முன்னெடுக்கப்பட்டு வந்த வரிச்சூத்திரம் நியாயமற்றது, எனவே அது மாற்றியமைக்கப்பட வேண்டும் எனத் தொடர்ச்சியாக தெரிவித்தோம்.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட அரச வருவாயை விட அதிக வருவாயைப் பெறும் இந்த நியாயமற்ற வரி சூத்திரத்தை மக்கள் ஆணை மூலம் மாற்றியமைப்போம் என்று தெரிவித்தோம்.

இம்முறை பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை வழங்கினால் அந்த ஆணையுடன் சர்வதேச நாணய நிதியத்துடன் புதியதொரு இணக்கப்பாட்டை எட்டுவோம்.

தற்போதுள்ள சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாடுகள் மாற வேண்டும், மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியினராகிய நாம் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்றால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் கைகோர்த்து, சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை மாற்றியமைக்கும் செயல்முறைக்குப் பக்க பலத்தைக் கொடுப்போம்.

கர்ப்பிணித் தாய் முதல் குழந்தை, சிறுவர்கள், முதியவர்கள், இளைஞர்கள் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் வரிச்சூத்திரம் நாட்டில் அமுலில் காணப்படுகின்றது. இதற்கு முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசே பொறுப்பாகும்." – என்றார்.



# அலங்கார இலை செய்கையை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை

மத்திய மாகாணத்தில் கிராமிய மட்டத்தில் அலங்கார இலைகளின் செய்கையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அலங்கார இலைகள் உள்ளிட்ட சில வகையான செய்கைகளின் மூலம் விவசாயிகள் அதிக வருமானத்தை ஈட்ட முடியுமென மத்திய மாகாண விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்துள்ள நிலையில், ஹோட்டல்களை அலங்கரிக்கும் இந்த அலங்கார இலைகளுக்கு அதிக கேள்வி நிலவுவதாக திணைக்களம் கூறியுள்ளது.

# ஸ்ரீரங்கா கைதாகலாம்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீரங்காவைக் கைது செய்வதற்கான விசாரணைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அவதூறு ஏற்படும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஸ்ரீரங்காவைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றனவெனக் கொழும்பு பிரதம நீதிவான் திலின கமகேவிடம் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அறிவித்திருந்தனர்.

எனினும், பிரதான சந்தேகநபரான ஸ்ரீரங்கா தற்போது வீட்டில் இல்லாத நிலையில் அவரைத் தேடி விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

தமது சேவைபெறுநர்கள் இந்த வழக்கின் சாட்சியாளர்களாக உள்ளனர் என இந்தச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சில சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சாட்சியாளர்களை இவ்வாறு விளக்கமறியலில் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் பொலிஸார் வழக்கு தொடர்பான விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத நிலை உருவாகும் என ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிவான், சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 8 சந்தேகநபர்களில் நால்வரை மாத்திரம் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

ஏனைய சந்தேகநபர்கள் நால்வரையும் எதிர்வரும் நவம்பர் 4ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# யாழில் உரியவர்களின்றி நிற்கும் கார் இப்போது பொலிஸின் கண்காணிப்பில்




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், தாவடிச் சந்தியில் வீதியோரம் அநாதரவாக 5 தினங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை வீதியில் தாவடிச் சந்திக்கு அருகே 5 தினங்களாக ஓர் கார் வீதியோரம் அநாதரவாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் காரின் இலக்கம் மற்றும் புகைப்படங்களை சேகரித்து மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சகல கதவுகளும் பூட்டப்பட்டுள்ளமையால் காரைப் பொலிஸாரினால் எடுத்துச் செல்ல முடியவில்லை. இருந்தபோதும் 5 தினங்களுக்கு முன்பு இந்தக் காருடன் ஒரு பெண் காணப்பட்டார் எனக் கூறப்படுகின்றபோதும் காரின் உரிமையாளர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

# இன்றைய ராசி பலன்கள் -23.10.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்கலாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும். தேவையற்ற செலவுகள் செய்ய வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை இன்று காணப்படும்.உங்கள் உணவு முறைகளை கட்டுப்படுத்தவும்.




இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் தன்னபிக்கை மற்றும் ஆற்றல் சிறப்பாக இருக்கும்.




இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம்படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகள முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்காது.இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிபார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பராமரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பிக்கை அதிகரிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.

பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாக இன்று பணப் பற்றாக்குறை காணப்படும்.சூழ்நிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் பதட்டம் காணப்படும். ஆரோக்கியக் குறைபாடு ஏற்படும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். இன்று திருப்தி நிலவும்.

உங்கள் பணியில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட்புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -23.10.2024




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலையம் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத் தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள்.உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ்நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

சளி சம்பந்தமான பிரச்சினை காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றிக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிக பொறுப்புகள் காணப்படும்.உங்கள் குடும்பத்திற்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

உங்கள் தாயின் உடல் நிலை கவலை அளிக்கும். அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாக இன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.





